செய்யூரில் நீதிமன்றம் அமைப்பது தொடர்பாக செயற்குறிப்பு எதுவும் உயர் நீதிமன்றத்திலிருந்து இதுவரை பெறப்படவில்லை. செய்யூரில் நீதிமன்றம் அமைப்பது தொடர்பாக, உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு பெறப்படும் பட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய செய்யூர் தொகுதியில் செய்யூர் தலைமையிடமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு கிடைத்தவுடன், அங்கே நீதிமன்றம் அமைப்பது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்படும் என்று அறிவித்துள்ளதற்கு நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு இதனைக் கொண்டுசென்று, செய்யூரில் நீதிமன்றம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 302, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

302—

மரபுசாரா எரிசக்தி

***31539—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மரபுசாரா எரிசக்தி ஆராய்ச்சி மையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 21]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மரபுசாரா எரிசக்தி ஆராய்ச்சி மையங்களை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை. ஆனால், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி—New and renewable energy—*என்று அழைக்கப்படும் மரபுசாரா எரிசக்தி*—Non—conventional energy—*தொடர்பான பல்வேறு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை அண்ணா பல்கலைகழக்கத்தின் ஓர் அங்கமான ஆற்றல் ஆய்வுக்கான கல்வி நிறுவனம்*—Institute of Energy studies—*மேற்கொண்டு வருகிறது. இந்த ஆராய்ச்சி நிறுவனம் மரபுசாரா எரிசக்தித் திறன் பயன்பாட்டை அதிகரிக்கத் தேவையான மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அடிப்படைத் திறனுக்கான சிறப்புப் பயிற்சி அளித்தல், கலந்தாலோசனை மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல் போன்ற பணிகளைச் செய்துவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் தமிழர்களின் நல்வாழ்வில் உண்மையான அக்கறைகொண்ட ஒரே தலைவர், ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம் தொப்புள்கொடி உறவான இலங்கைவாழ் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை உலகத்தின் கவனத்திற்கு எடுத்துச்செல்லும் விதமாகச் சட்டமன்றப் பேரவையிலே 16—9—2015 அன்று தீர்மானத்தை நிறைவேற்றிப் போராடும் உண்மையான தலைவர் அவர்களுக்கு, தென்காசி தொகுதி மக்கள் சார்பாகவும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எரிசக்தித் துறையில் சிறந்த மாநிலமாகத் தமிழகம் தேர்வு செய்யப்பட்டு, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் சிறந்த மாநிலத்திற்கான விருது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டிருப்பது பெருமைக்குரியதாகும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சொன்னார்கள்; தமிழகத்தை மின் மிகை மாநிலமாக*

ஆக்கிக் காட்டினார்கள். இந்தியாவின் காற்றாலைத் திறனில் தமிழகம் முதன்மை இடத்தில் இருப்பதுபோல சூரிய ஒளி மின் உற்பத்தியிலும் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மரபு சார்ந்த மின் உற்பத்தித் திட்டங்களான நீர், அனல், அணு போன்று இல்லாது மரபுசாரா எரிசக்தி திட்டங்களால் இயற்கைக்கு அழிவு இல்லை; சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பில்லை. மரபுசாரா எரிசக்தித் திட்டத்திற்கு நிறுவனச் செலவு மட்டும்தான்; எரிபொருள் செலவு கிடையாது; தொடர் செலவினம் குறையும். மரபுசாரா எரிசக்தி உற்பத்தித் திட்டங்கள் இயற்கையைப் பாதுகாத்து, குறைந்த செலவில் மின்சாரத்தை அளிக்கிறது. இப்படி சிறப்பு வாய்ந்த மரபுசாரா எரிசக்தி உற்பத்தியைத் தமிழ்நாட்டில் மேம்படுத்த, மரபுசாரா எரிசக்தி ஆராய்ச்சி மையங்கள் அமைப்பதன்மூலம் மின் உற்பத்தித் திட்டங்களைப் புதியதாக எங்கெங்கு அமைக்கலாம் என்று ஆய்வு மேற்கொண்டு செயல்படுத்த உதவியாக அமையும். எனவே, தமிழ்நாட்டில் மரபுசாரா எரிசக்தி ஆராய்ச்சி மையங்களை அமைப்பதற்கு மீண்டும் பரிசீலிக்க அரசு முன்வருமா என்பதை தென்காசி தொகுதி மக்களின் சார்பாகவும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளி மின்சக்தியினை நவீன தொழில்நுட்பத்தோடு செயல்படுத்துவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, தமிழ்நாட்டிலே இதற்கென்று தனியாக ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்தவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதற்கென்று தனியாக மாநில அளவிலே உலகளாவிய தொழில்நுட்பம் சார்ந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். அந்த வகையிலே, இப்போது சீனா, கொரியா, ஸ்பெயின், ஸ்வீடன், ஜெர்மனி போன்ற நாடுகளில் சூரிய ஒளி மின்சக்தியை மேம்படுத்துவதற்கு வேண்டிய ஆய்வுகளை மேற்கொண்டு, நாளுக்கு நாள் நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையிலே, இப்போது

உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, அதன் அடிப்படையிலே இப்போது தரமான சூரிய ஒளி மின் தகடுகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, மேலைநாடுகளிலே தேவையான அளவிற்கு இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஆண்டுக்காண்டு அந்த புதிய தொழில்நுட்பத்தோடு சூரிய ஒளி மின்தகடுகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த நிலையிலே நாம் தனியாக அவர்களுக்கு இணையாக ஒரு புதிய ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்திவிட முடியாது. அந்தத் தொழில்நுட்பத்தையே நாம் பயன்படுத்தி, தமிழகத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, எப்படி காற்றாலை மின் உற்பத்தியிலே தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் என்ற நிலையினை எடுத்திருக்கிறதோ (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவே நிச்சயமாக சூரிய ஒளி மின்சக்தி உற்பத்தியிலும் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடம் என்ற நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உருவாக்கும் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குரிய நடவடிக்கைகள் புயல் வேகத்தில் எடுக்கப்பட்டுவருகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா மாவட்டங்களில் விவசாயிகளுக்கு சூரிய ஒளி மின்சக்தியால் இயங்கக்கூடிய விவசாய பம்ப் செட்டுகள் கடந்த ஆண்டில் கொடுக்கப்பட்டன. அவை வரவேற்கத்தக்க வகையிலே விவசாயிகளுக்கு எங்கள் பகுதியில் கொடுக்கப்பட்டன. அதனுடைய எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா? வரும் ஆண்டுகளில் அதை அதிகரிப்பீர்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் முதன்முதலாக இந்தியாவிலேயே சூரிய ஒளி

மின்சக்தியைப் பயன்படுத்தி விவசாயிகளுக்கு 80 சதவீத மானியத்துடன் பம்ப் செட்டுகள் இப்போது வழங்கப்பட்டுவருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக இங்கே கொண்டுவந்து, அதை அமல்படுத்தி வருகின்றவர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 303, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

303—

வீட்டுமனைப் பட்டா

***63418—திரு. க. தமிழழகன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திட்டக்குடி தொகுதி, பெண்ணாடம் பேரூராட்சி, டி. அகரம் கிராமத்திலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி, பெண்ணாடம் பேரூராட்சி, டி. அகரம் கிராமத்தைச் சார்ந்த ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட, புல எண் 70/7—ல் 3.56.0 ஹெக்டேர் நிலம் இத்துறையின்மூலம் கையகம் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் வாழும் ஆதி திராவிட மக்களிடமிருந்து இலவச வீட்டுமனைப் பட்டா கோரி 156 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இம்மனுதாரர்களின் வருமான